தினமணி

**பயிர்க்கடன் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

First Published : 10 Oct 2010 10:57:54 AM IST

பழனி, அக்.9: பழனி மற்றும் சுற்றுப் பகுதி சிறுகுறு விவசாயிகள், கடந்த பல ஆண்டுகளாக பயிர்க்கடன் இல்லாததால் அவதிப்பட்டு வருவதாகவும், அவற்றை உடனே வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து முன்னாள் எம்எல்ஏவும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவருமான பழனிவேல், ஆட்சியருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

பழனி மற்றும் சுற்று வட்டாரங்களில் 15-க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் உள்ளன. இங்கு கடந்த 4 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு வேண்டிய கடன் வசதி, உரம் மற்றும் மருந்துகள் ஆகியன நியாயமான விலையில் கிடைப்பது இல்லை.

கடந்த காலங்களில் | 10 கோடி வரை வழங்கப்பட்டு வந்த பயிர்க்கடன் 4 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நிலையில், தனி அலுவலர்கள் ஆதிக்கத்தில் வங்கிகள் சிக்கியுள்ளன. நகைக்கடன் மட்டுமே வழங்கப்பட்டு வரும் நிலையில், எந்த சிறு,குறு விவசாயிகளிடமும் அந்த அளவு நகை இல்லை.

தற்போது பழனி சுற்றுவட்டாரப் பகுதியில் பரவலாக மழை பெய்த நிலையில், விவசாயப் பணிகள் தொடக்கப்பட்டுள்ளன. பலரும் மக்காசோளம் விதைத்துள்ள நிலையில், கூட்டுறவுச் சங்கங்களில் போதிய அளவு உரம் இல்லை. மேலும், பல இடங்களிலும் உரங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட (| 516.40-க்கு பதிலாக |650-|700) அதிக விலைக்கு விற்கின்றனர். விலையைக் குறைத்துக் கேட்டால் இருப்பு இல்லை என்ற பதில் கூறுகின்றனராம்.

ரசாயன உரமும் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பப்படாததால் தனியார் கடைகளில் அதிக விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

பழனியை அடுத்த பழைய ஆயக்குடி டிடி 600 கூட்டுறவு சங்கத்துக்கு, கடந்த 1.4.2009 முதல் இன்றுவரை பாக்டம்பாஸ், பொட்டாஷ், கலப்புரம், டிஏபி, யூரியா என மொத்தமே 86 டன் அனுப்பிய நிலையில், தற்போது எதுவும் இல்லாத நிலை நீடித்து வருகிறது.

டான்பெட் மண்டல அலுவலகத்தில் உரங்களை லாரிகளில் ஏற்ற ஆட்கள் இல்லாததால் உரம் அனுப்ப இயலவில்லை என்ற பதிலைக் கூறி காலம் கடத்துவதால், விவசாயிகள் தனியார் உரக்கடைகளை நாடவேண்டி உள்ளது.

ஆகவே, சிறுகுறு விவசாயிகள் நலனுக்காக கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன், உரம் விற்பனை நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டுமென அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கரும்பு விவசாயிகள் சங்க மாநாடு: வரவேற்பு குழு அமைப்பு**

First Published : 10 Oct 2010 02:42:34 PM IST

உளுந்தூர்பேட்டை, அக். 9: தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் உளுந்தூர்பேட்டையில் நடக்கவுள்ள மாநில சிறப்பு மாநாட்டிற்கான வரவேற்புக் குழு வெள்ளிக்கிழமை அமைக்கப்பட்டது.

÷இக்கூட்டத்தில் கூட்டுறவு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளை பாதுகாத்திடகோரும் மாநில சிறப்பு மாநாட்டை நவம்பர் 13-ல் உளுந்தூர்பேட்டையில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

÷உளுந்தூர்பேட்டை வட்டத்தில் மாநாட்டுக்கான நிதி வசூலித்தல், 150 கிராமங்களில் பிரச்சாரம் செய்வது உள்பட பல்வேறு தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

÷கூட்டத்திற்கு செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு விவசாயிகள் சங்கத்தலைவர் கே.எம். ஜெயராமன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலர் டி. ஏழுமலை, சர்க்கரை ஆலை தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில பொதுச்செயலர் வி. உதயகுமார், மாவட்ட செயலர் என். சுப்பிரமணியன், மாவட்ட தலைவர் ஆர். தாண்டவராயன் ஆகியோர் பங்கேற்றனர்.

÷மாநாடு சிறப்பாக நடத்துவதற்கு 101 பேர் கொண்ட வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது. அதில் வரவேற்புக்குழு தலைவராக வி. இராதாகிருஷ்ணன், செயலராக ஆர். சீனுவாசன், பொருளாளராக சுந்தரமூர்த்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**மகசூலை அதிகரிக்க ஜிப்சம் உரமிட வேண்டும்**

First Published : 10 Oct 2010 01:26:11 PM IST

ஜயங்கொண்டம், அக். 9: பயிர்களுக்கு ஜிப்சம் உரமிட்டு மகசூலை அதிகரிக்கலாம் என்று விவசாயிகளுக்கு ஜயங்கொண்டம் வேளாண் உதவி இயக்குநர் பழனிச்சாமி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

அனைத்துப் பயிர்களுக்கும் தழை, மணி, சாம்பல் சத்து தவிர பிற நுண் சத்துக்கள் தேவைப்படுகிறது. கந்தகம், கால்சியம், துத்தநாகம், போரான், மெக்னிசியம், மாங்கனிஸ், குளோரின், கார்பன், ஹைட்ரஜன், மாலிப்டினம், இரும்பு, அலுமினியம், கார்பன், சோடியம், ஆகியவை நுண் சத்துக்களாகும்.

நெல்லுக்கு துத்தநாகம், கந்தகம், பயிறு வகை பயிர்களுக்கு கந்தகம், கடலைக்கு கந்தகம், கால்சியம், எள்ளுக்கு மாங்கனீசு, கந்தகம், கரும்பிற்கு இரும்பு, துத்தநாகம், தென்னைக்கு

துத்தநாகம், போரான், வெங்காயத்திற்கு கந்தகம், மிளகாய் மற்றும் பூக்களுக்கு நுண்சத்துக் கலவையும் தேவைப்படுகிறது.

கந்தகச்சத்து: இது தழை, மணி, சாம்பல் சத்துக்களுக்குப் பிறகு முக்கியமாகிறது. தாவரங்களில் இலை பச்சையம் உருவாவதற்கும், புரத உற்பத்திக்கும், எண்ணெய்த்தன்மை, வைட்டமின் உற்பத்தி ஆகியவற்றிற்கு கந்தகச்சத்து அவசியமாகிறது. இதை இடுவதால் கடலையில் 32 சதமும், நெல்லில் 17 சதமும் பாசிப் பயிரில் 20 சதமும் மகசூல் அதிகரிக்கிறது என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கிறது.

கந்தகத்தை குறைந்த விலையில் அளிப்பது ஜிப்சம் மட்டுமே. ஜிப்சத்தில் கந்தகச் சத்து 18 சதமும், கால்சியம் 21 சதமும் உள்ளது. ஜிப்சம் இடவேண்டிய அளவு(1 ஏக்கருக்கு):

நெல்லுக்கு 200 கிலோ, பயிறு வகைகளுக்கு 44 கிலோ, கடலைக்கு 160 கிலோ, எள்ளுக்கு 80 கிலோ ஆகும். இதை உரங்களைப் போன்றே அடியுரமாக தனியாக இடவேண்டும்.

ஜிப்சம், ஜயங்கொண்டம் மற்றும் மீன்சுருட்டி வேளாண் விரிவாக்க மையங்களில் மானிய விலையில் கிடைக்கிறது. எனவே விவசாயிகள் ஜிப்சத்தை வாங்கிப் பயனடையலாம் என்றார் பழனிச்சாமி.

**தமிழக விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டம்**

First Published : 10 Oct 2010 01:25:53 PM IST

பெரம்பலூர், அக். 9: அரியலூர், பெரம்பலூர், திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தமிழக விவசாயிகள் சங்கச் செயற்குழு கூட்டம் பெரம்பலூரில் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு அமைப்பின் மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம் தலைமை வகித்தார்.

பெரம்பலூர் மாவட்டத் தலைவர் பி. மாணிக்கம், அரியலூர் மாவட்டத் தலைவர் என்.பி. அன்பழகன், பெரம்பலூர் மாவட்ட இளைஞரணிச் செயலர் வி. நீலகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மின் மோட்டார் வழங்கும் திட்டத்தின்கீழ் பழைய மோட்டாரை ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனை கூடாது.

இலவச கலர் டி.வி. திட்டத்தைப் போல இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியாது.

கிணறு, ஆழ்குழாய் கிணறு ஆகியவற்றின் ஆழம், நிலத்தில் நீர் பாசனத்துக்காக அமைக்கப்பட்டுள்ள குழாய்கள், சொட்டுநீர், தெளிப்பு நீர் பாசன அமைப்புகளுக்கு தேவைப்படும் அழுத்தம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அவரவரின் தேவைக்கேற்ப ஆய்வு செய்து, அதற்கேற்றவாறு தண்ணீரைத் திறனாக வெளியேற்றும் சக்தி கொண்ட தரமான மின் மோட்டாரையே விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

இலவச மின்சாரத்தை ரத்து செய்யும் முயற்சியாக விவசாய மின் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தும் முடிவைக் கைவிட வேண்டும்.

ஒன்றியத்தின் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு 2007-2008, 2008-2009 ஆண்டுகளுக்கான ஊக்கத் தொகை லிட்டருக்கு 0.50 பைசா வழங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், லிட்டருக்கு ஆண்டுக்கு 0.05 பைசா பிடித்தம் செய்யக் கூடாது. எனவே, அதை உடனடியாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் அமைப்பின் திருச்சி மாவட்டச் செயலர் என். கணேசன், அரியலூர் மாவட்ட இளைஞர் அணிச் செயலர் வி. விஸ்வநாதன், நிர்வாகிகள் பி. ராமசாமி, கே. துரைராஜ், துரைசாமி, ரங்கராஜ், ஞானதேசிகன், அருணாசலம், ராமசாமி, பிச்சைபிள்ளை, சுந்தர்ராஜன், மணி உள்ளிட்ட விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**மாவுப்பூச்சி தாக்குதல்: புதுதில்லி வேளாண் விஞ்ஞானிகள் ஆய்வு**

First Published : 10 Oct 2010 01:14:40 PM IST

பெரம்பலூர், அக். 9: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் பயிர்களில் மாவுப்பூச்சி தாக்குதல் குறித்து வேளாண் விஞ்ஞானிகள் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

புதுதில்லியில் உள்ள மத்திய வேளாண்மை, கூட்டுறவுத் துறை கீழ் இயங்கும் மும்பை பருத்தி மேம்பாட்டுத் துறையின் நிதியுதவியுடன் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையமும், புதுதில்லி தேசிய ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையமும் இணைந்து, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் பி.டி. பருத்தியில் தேசிய பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மை தகவல் அமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் பருத்தி பயிரிடப்பட்டுள்ள பகுதிகளை புதுதில்லி தேசிய ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மைய முதன்மை வேளாண் விஞ்ஞானி வெண்ணிலா, தொழில்நுட்ப அலுவலர் சத்தியகுமார் ஆகியோர் தலைமையிலான விஞ்ஞானிகள், வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, கை.களத்தூர், சிறுநிலா, கூடலூர், அய்யலூர், குடிகாடு, உள்ளிட்ட கிராமங்களுக்குச் சென்று திட்ட செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். மேலும், பி.டி. பருத்தியில் மிரிட் நாவாய் பூச்சிகள், அசுவணி, மாவுப்பூச்சிகள் தாக்குதல் இருப்பது கண்டறியப்பட்டு, அதைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

பின்னர், பெரம்பலூர் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு, பப்பாளி, கொய்யா ஆகிய பயிர்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

வேப்பந்தட்டை வேளாண் துணை இயக்குநர் சேகர், வேளாண் அறிவியல் மைய திட்டப் பொறுப்பாளர் சி. சங்கர், வேளாண் அலுவலர்கள் ராஜேந்திரன், ராஜு, வேளாண் துணை அலுவலர் செல்வராஜ், திட்ட அலுவலர் ப. சரவணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பன்னீர் திராட்சை, ஆப்பிள் விலை திடீர் சரிவு**

First Published : 10 Oct 2010 02:09:17 PM IST

தருமபுரி, அக்.9: பன்னீர் திராட்சை, ஆப்பிள் விலை திடீரென சரிந்துள்ளது.

தேனி, கம்பம் பகுதியில் விளையும் திராட்சை பழங்கள், தருமபுரி மாவட்டத்தில் விற்பனை செய்யப்படுகின்றது. அதிக விளைச்சல் காரணமாக திராட்சை வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலை சரிந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பொதுவாக ஒரு கிலோ பன்னீர் திராட்சை | 40 முதல் | 50 வரை விற்பனை செய்யப்படுவது வழக்கம். ஆனால் தற்போது ஒரு கிலோ | 20-க்கு தான் விற்பனை செய்யப்படுகிறது.

அதே நேரத்தில் கருப்பு திராட்சை கிலோ | 40-க்கும், பச்சை திராட்சை கிலோ | 30-க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

அதேபோல | 120 வரை விற்பனை செய்யப்பட்ட ஆப்பிள் பழங்கள் தற்போது சிறிய ரகம் | 40-க்கும், பெரிய அளவிலான ஆப்பிள் பழங்கள் | 50-க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

**எண்ணெய்வித்து பயிற்சி முகாம்**

First Published : 10 Oct 2010 02:18:58 PM IST

செய்யாறு, அக். 9: செய்யாறு வேளாண்மை கோட்டம் சார்பில், விவசாயிகளுக்கான எண்ணெய்வித்து பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

செய்யாறு வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடைபெற்ற முகாமுக்கு மாவட்ட வேளாண்மைத்துறை துணை இயக்குனர் கி.வீரமணி தலைமைத் தாங்கி எண்ணெய் வித்து பயிர்களுக்கான மானிய திட்டங்கள் குறித்து பேசினார்.

மணிலா பயிரை தாக்கும் நோய்கள் குறித்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, விதை நேர்த்தி செய்யும் முறை குறித்து வேளாண்மை துணை அலுவலர் நாகேந்திரன், தரமான விதைகளை உற்பத்தி செய்யும் முறை குறித்து விதை சான்று அலுவலர் குமரன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

நெடும்பிறை, பல்லி, பைங்கினர் மற்றும் அருகாவூர் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலமுருகன், அரிதாஸ் காந்தி, பாதுாஸ்ல், ராஜலட்சுமி ஆகியோர் விவசாயிகளுக்கான செயல் விளக்கங்களை செய்து காட்டினர்.

**வேளாண் பாதுகாப்புப் படை மூலம் 2 ஆயிரம் ஏக்கரில் கோடை சாகுபடி**

First Published : 10 Oct 2010 01:31:21 PM IST

கும்பகோணம், அக். 9: கோடை சாகுபடியில் வேளாண் பாதுகாப்புப் படையைக் கொண்டு சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் நடவுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார் அமைச்சர் கோ.சி. மணி.

தமிழக அரசின் புதிய திட்டமான கூட்டுறவு வேளாண் பாதுகாப்புப் படையினரால், நடவு இயந்திரம் மூலம் நாற்றும் நடும் திட்டத்தை இடையாநல்லூரில், தமிழகக் கூட்டுறவுத் துறை அமைச்சர் கோ.சி. மணி சனிக்கிழமை தொடக்கி வைத்து பேசியது:

காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் சம்பா, தாளடி சாகுபடி நடைபெற்று வருகிறது. நாற்றங்கால் விடுதல், நடவு செய்தல் போன்ற பணிகள் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் நடப்பதால், ஆள் பற்றாக்குறை ஏற்பட்டு, நடவுப் பணிகளை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

இதைத் தவிர்க்கும் வகையில், இயந்திரம் மூலம் நாற்று நடும் திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கான இயந்திரங்கள் வாங்கப்பட்டு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஏர்வாடி, ஒன்பத்துவேலி, அம்மாபேட்டை, பூண்டி, கபிஸ்தலம், குறிச்சி, பந்தநல்லூர், திருமங்கைசேரி, கதிராமங்கலம், வேப்பத்தூர், பாலாக்குடி, எஸ்.புதூர், க. மல்லபுரம் ஆகிய கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த இயந்திரத்தைக் கையாளுவதற்கு தேர்வு செய்யப்பட்ட விவசாயக் கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களைக் கொண்டு கூட்டுறவு வேளாண் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது. இப் படையைக் கொண்டு சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் நடவுப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் 21 சங்கங்களிலும், திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் தலா 20 சங்கங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயந்திரம் மூலம் நடவு செய்வதால் கூலி மற்றும் விதைக்கு ஆகும் செலவு குறைவதுடன், ஒரே சீராக பயிர் நடப்பட்டு, தண்ணீர், உரம் ஆகியவை சிக்கனமாகப் பயன்படுத்தப்படுகிறது என்றார் அவர். இதைத்தொடர்ந்து, சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் கீழ் திருமண உதவித் தொகையாக 20 பேருக்கு | 86 ஆயிரம், ஈமச் சடங்கு, இயற்கை மரணத்திற்கான உதவித் தொகையாக 3 பேருக்கு | 37,500 உள்பட | 1,23,500-க்கான நலத் திட்ட உதவிகளை அமைச்சர் பயனாளிகளுக்கு வழங்கினார்.

தினமலர்

## ‘ராஜராஜன் 1000’: முதல்வர் ஆய்வு

திருவாரூர், அக். 11-

தமிழக முதல்வர் கருணாநிதி தனது மைத்துனர் தட்சிணாமூர்த்தி மனைவி தனம் படத்திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்க திருவாரூர் வந்தார்.

படத்திறப்பு நிகழ்ச்சிக்கு வரும் போது, கோவில் திருமாளத்தில் விவசாயி வரதராஜன் சாகுபடி செய்துள்ள, ‘ராஜராஜன் 1000’ (செம்மை நெல்) சாகுபடியை காரில் இருந்து வெளியில் வந்து பார்வையிட்டு விவரங்களை கேட்டறிந்தார். சாகுபடி வயலில் வைக்கப்பட்டிருந்த விளம்பர பலகையில், ‘ராஜராஜன் 1000’ என இருந்தது. ராஜராஜன் என்ற பெயருக்கு முன், ‘இ’ சேர்க்க வேண்டும். ‘இனிமேல், ‘இராஜராஜன் 1000’ என குறிப்பிட வேண்டும்’ என முதல்வர் கருணாநிதி, கலெக்டருக்கு உத்தரவிட்டார்.

**சிறுவத்தூரில் "ராஜராஜன் 1000' நெல் சாகுபடி விளக்கக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,01:05 IST

கடலூர் : சிறுவத்தூரில் "ராஜராஜன் 1,000' நெல் சாகுபடி நடவு முறை மற்றும் விதை நேர்த்தி குறித்த செயல் விளக்கக் கூட்டம் நடந்தது.தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் "ராஜராஜன் 1,000' செம்மை நெல் சாகுபடியில் நடவு முறை மற்றும் விதை நேர்த்தி செயல் விளக்கக் கூட்டம் பண்ருட்டி அடுத்த சிறுவத்தூர் கிராமத்தில் நடந்தது. பண்ருட்டி வேளாண் உதவி இயக்குனர் ஹரிதாஸ் தலைமை தாங்கினார். உதவி வேளாண் அலுவலர் சந்ரு, ஊராட்சித் தலைவர் ராஜ்குமார், நீர்பாசன சங்கத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தனர். இதில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் மைக் கல்லூரி மாணவர்கள் விதை நேர்த்தி "ராஜராஜன் 1,000' செம்மை நெல் சாகுபடி அனைத்து ரக நெல் விதைகளிலும் மேற்கொள்ளலாம். மேலும் ஒரு ஏக்கருக்கு 3 கிலோ விதை மூலம் 3,000 கிலோ மகசூல் பெறலாம் என விளக்கமளித்தனர்.

## ராஜராஜன் 1000 நெல் சாகுபடி ஆத்மா திட்ட கூட்டத்தில் முடிவு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,00:59 IST

சிதம்பரம் : ராஜராஜன் 1000 நெல் சாகுபடி அதிக அளவு செய்ய விளம்பர பணிகளுக்கு ஆத்மா திட்டதில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்வது என முடிவு செய்யப்பட்டது.
கீரப்பாளையம் வேளாண்மை உதவி இயக் குனர் அலுவலகத்தில் ஆத்மா திட்ட செயலாக்கக் கூட்டம் வேளாண்மை உதவி இயக்குனர் விஜயகுமார் தலைமØயில் நடந் தது. ஆத்மா திட்ட வட்டார தலைவர் பூபாலன் முன் னிலை வகித்தார். தோட் டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன், கால் நடை டாக்டர் மோகன், வேளாண் அலுவலர் சித்ரா ஆகியோர் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினர். ஆலோசனைக் குழு உறுப்பினர்களான சுதா, பாலு, மணிமேகலை, ராமசாமி, நளங்கிள்ளி, இளஞ் செழியன் பங்கேற்றனர்.

கீரப்பாளையம் வட்டாரத்தில் அதிக மகசூல் எடுத்த விவசாயிக்கு ஊக்கத் தொகை வழங்குவது. செயல்விளக்க தளை அமைக்க மானியம் வங்குவது. லின் கேஜ் வயல் தின விழா வாக்கூர் கிராமத்தில் நடத்துவது. ராஜராஜன் 1000 நெல் சாகுபடி அதிக அளவு செய்ய விளம்பர பணிகளுக்கு இத்திட்டதில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்வது. நெல் சாகுபடி மீன் வளர்ப்பு. தோட் டக்கலை சாகுபடி மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை சம்மந்தமான திறன் வளர்ப்பு பயிற்சி பெற உறுப்பினர்கள் தேர்வு செய் வது உள்ளிட்ட தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டது.

## 50 சதவீதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு "சிங்க் சல்பேட்'

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,00:08 IST

செஞ்சி : வல்லம் வட்டாரத்தில் விவசாயி களுக்கு 50 சதவீதம் மானிய விலையில் சிங்க் சல்பேட் வழங்கப் படுவதாக வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.
வல்லம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் துரைசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: நெல் பயிரில் துத்தநாகம் எனும் நுண்சத்து குறைபாட்டால் ஏற்படும் பயிர் வளர்ச்சி குறை வையும், பயிர் மஞ்சள் நிறமாக மாறுவதையும் சரி செய்யவும். நெல் பயிரில் தூர்கள் அதிகமாக உருவாவதற்கும், பயிர்கள் நன்கு கிளைத்து பசுமையாக வளர் வதற்கும் சிங்க் சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில் 25 கிலோ மணலுடன் கலந்து நெல் நடவு செய்த உடன் இட வேண்டும்.

தற்போது வல்லம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் 1 கிலோ சிங்க் சல்பேட் 20 ரூபாய் விலையில் விநியோகிக்கப்படுகிறது. வல்லம் வட்டாரத்தில் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோரை தொடர்பு கொண்டு வேளாண்மை விரிவாக்க மையத்தில் மான்ய விலையில் சிங்க் சல்பேட் வாங்கி நெல் பயிரில் இட்டு அதிக மகசூல் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வேளாண்மை களப்பணிகள் அதிகாரி ஆய்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,00:33 IST

விழுப்புரம் : வேளாண்மை திட்ட களப்பணிகள் மற்றும் தரிசு நில மேம்பாடுகள் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.வல்லம் வட்டாரத்தில் வேளாண்மை திட்ட களப் பணிகள் குறித்து விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ் ணன் ஆய்வு செய்தார். தையூர் கிராமத்தில் நீர்வள நிலவள திட்டத் தில் சாகுபடி செய்த ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறை வயல்களை பார்வையிட்டு தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கினார்.

விரிவான தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் தரிசாக உள்ள நிலங்களில் ஆய்வு மேற்கொண்டு வயல்களில் மண் மாதிரி எடுத்து பரிசோதனை செய் வது குறித்தும் களப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. கலர் நிலத்தை மேம்படுத்துவது, எந்த வகை பயிர் சாகுபடி செய்வது குறித்து தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கி மண் மாதிரி சேகரித்தனர். திண்டிவனம் எண் ணெய்வித்துகள் ஆராய்ச்சி மைய பேராசிரியர் ராமச் சந்திரன், வேளாண் துணை இயக்குனர் ராஜசேகரன், வல்லம் வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி உட்பட பலர் உடனிருந்தனர்.

**வயல் வெளி பள்ளி துவக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,00:30 IST

விழுப்புரம் : கண்டமங்கலம் ஒன்றியம் கலிஞ்சிக்குப்பம் கிராமத்தில் நெல் உழவர் வயல் வெளிப் பள்ளி துவக்க விழா நடந்தது.ஊராட்சி தலைவர் சாந்தா முருகன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் ஹரி கிருஷ்ணன் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை இணை

இயக்குனர் ராமகிருஷ்ணன் நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசினார். விஷமில்லாத உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் முறை குறித்து கலெக்டரின் நேர்முக உதவியாளர் சக்கரவர்த்தி பேசினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் கோதண்டம், உதவி வேளாண்மை அலுவலர்கள் குமார், ஹரிராமச்சந்திரன், ரகோத்தமன், ராஜ்குமார், விமலா செய்திருந்தனர். பாலமுருகன் நன்றி கூறினார்.

**கரும்பு விவசாயிகள் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,00:29 IST

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை அடுத்த பெரியசெவலை கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க கூட்டம் நடந்தது.தலைவர் ஜெயராமன் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் ஏழுமலை, ஆலை தொழிலாளர் சம்மேளன மாநில பொதுச்செயலாளர் உதயகுமார், விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுப்ரமணியன், தலைவர் தாண்டவராயன் பேசினர். விழுப்புரத்தில் 13.11.2010 அன்று நடக்கும் மாநில சிறப்பு மாநாடு நடத்துவதற்கு 101 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. வரவேற்பு குழு தலைவராக ராதாகிருஷ்ணன், செயலாளராக சீனுவாசன், பொருளாளராக சுந்தரமூர்த்தி தேர்வு செய்யப்பட்டனர்.

**விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,00:12 IST

திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் பகுதி விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.திருக்கோவிலூர் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் குறித்த நேரடி பயிற்சி செய்து காண்பிக்கப்பட்டது. இதற்காக விவசாய சங்க பிரதிநிதிகள் ஜி.அரியூர், பகண்டை பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். வேளாண் பொறியியல் துறை பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் நேரடி விளக்கமளித்தனர். நீர்பாசன ஒருங்கிணைப்புக் குழு தலைவர் சண்முகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**மானிய விலையில் உளுந்து விதை வழங்கல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,00:00 IST

உளுந்தூர்பேட்டை : இருந்தை கிராமத்தில் மானிய விலையில் உளுந்து விதை வழங்கும் விழா நடந்தது.திருநாவலூர் ஒன்றியம் இருந்தை கிராமத்தில் துரிதப்படுத்தப்பட்ட பயறு பெருக்கு திட்டத்தில் உளுந்து விதை வழங்கும் விழா நடந்தது. ஊராட்சி தலைவர் ஸ்டெல்லாமேரி தலைமை தாங்கினார். வேளாண்மை துணை இயக்குனர் ராஜசேகரன் விவசாயிகளுக்கு மண்வள அட்டை மற்றும் உளுந்து விதைகளை 20 ரூபாய் மானியத் தில் வழங்கினார்.விழுப்புரம் மண் ஆய்வு கூட அலுவலர் ராம சாமி மண்வள அட்டை குறித்து விளக்கி பேசினார்.

**ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறை : பிரபலப்படுத்த வேளாண் துறை முயற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,03:58 IST

ஆத்தூர்: ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியில் செம்மை நெல் எனும் "ராஜராஜன் 1000' சாகுபடி முறையை வேளாண் துறை மக்களிடையே பிரபலப்படுத்த வேளாண்மை அலுவலர்கள், கூலி தொழிலாளர்களுடன் இணைந்து நெல் நாற்று நடவு செய்து அசத்தி வருகின்றனர்.
மடகாஸ்கார் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட நெல் சாகுபடி முறையை, "திருந்திய நெல் சாகுபடி முறை' என்ற பெயரில் பல ஆண்டுகளாக தமிழக பகுதிகளிலுள்ள விவசாய நிலங்களில் நெல் சாகுபடி செய்து வந்தனர். திருந்திய நெல் சாகுபடி முறை என்பதற்கு பதிலாக "செம்மை நெல் சாகுபடி' என பெயரிட்டு மூன்று ஆண்டுகளாக சாகுபடி செய்யப்படுகிறது. வேளாண்மைத்துறை அலுவலர்கள், விவசாயிகளின் நடவு முறை, சாகுபடி குறித்து எடுத்துரைப்பதால் அதிகளவில் விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர்.
தஞ்சையில் நடந்த விழாவில் தமிழக முதல்வர் கருணாநிதி, செம்மை நெல் சாகுபடி முறைக்கு பதிலாக "ராஜராஜன் 1,000 நெல்' என பெயரிட்டுள்ளார். இந்த சாகுபடி முறைகள் குறித்து ஆத்தூர் வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகளிடையே பிரபலப்படுத்த விளைநிலங்களுக்கு நேரடியாக சென்று விவசாயிகள், கூலி தொழிலாளர்களுடன் இணைந்து நடவு பணிகள் விழா நடத்தி அசத்தி வருகின்றனர்.
நேற்று ஆத்தூர் அருகே அப்பமசமுத்திரம், செல்லியம்பாளையத்தில் விவசாயி மாதேஸ்வரன் ஆகியோரது விவசாய நிலத்தில் ஆத்தூர் வட்டார வேளாண்மை அலுவலர் சக்கரவர்த்தி, உதவி வேளாண் அலுவலர் லலிதா பார்த்திபா ஆகியோர் விவசாயிகள், கூலி தொழிலாளர்களுடன் ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறை நடவு குறித்து விளக்கம் அளித்து நெல் நடவு செய்தனர். அப்போது கூலி பெண் தொழிலாளர்கள், "ஆத்தூரில் மழை பெய்து, ஆற்றிலேயே தண்ணீர் வந்தது... மூன்று போக நெல் விளையவேண்டும் ஏலேலோ...' என்ற நெல் நடவுக்கான நாட்டுப்புற பாடல்களை பாடிக்கொண்டு உற்சாகத்துடன் நடவு செய்தனர்.
இது குறித்து ஆத்தூர் வேளாண்மை அலுவலர் சக்கரவர்த்தி கூறியதாவது: கடந்த கால நெல் நடவுக்கு ஏக்கருக்கு 20, 30 கிலோ நெல் விதை தேவைப்படும். ஓரிடத்தில் 15 பயிர்கள் வரை நடவு

செய்தால் மூன்று டன் மகசூல் கிடைக்கும். ராஜராஜன் 1,000 நெல் சாகுபடியில் ஏக்கருக்கு மூன்று கிலோ நெல் விதை நாற்றுகளும், ஓரிரு பயிர்கள் நடவு செய்தால் ஏக்கருக்கு நான்கு முதல் ஐந்து டன் நெல் விளைச்சல் வருகிறது. இத்திட்டத்தின்படி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் நெல், உரம், களையெடுக்கும் கருவிகள் வழங்கப்படுகிறது. விவசாயிகள், கூலி தொழிலாளர்களுக்கு நடவு மற்றும் சாகுபடி முறை குறித்து விளக்கம் அளிப்பதால் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ராஜராஜன் 1,000 சாகுபடியில் அதிக உற்பத்திக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,03:57 IST

நாமக்கல்: "குறைந்த நீரில் அதிக உற்பத்தியை கொடுக்கக் கூடிய ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெறலாம்' என, உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில் நெல் சாகுபடிக்கு தேவையான நீரின் அளவு குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. இக்குறைபாட்டை நீக்க குறைந்த நீரில் அதிக உற்பத்தியை கொடுக்கக்கூடிய தொழில் நுட்பம்தான் "ராஜராஜன் 1,000' சாகுபடி முறை. ராஜராஜன் 1,000 முறையில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிக்கு பலவித நன்மைகள் கிடைக்கின்றன. நாற்றங்கால் பரப்பு ஒரு ஹெக்டேர் நடவுக்கு 800 ச.மீ., இருந்து 100 ச.மீ., குறைகிறது. விதை தேவை 6 கிலோவில் இருந்தும், நாற்றங்கால் பராமரிப்பு 30 நாட்களில் இருந்து 14 நாட்களாகவும் குறைகிறது. செலவு 68 சதவீதம் குறைகிறது. நாற்று பறிக்கும் செலவு 800 ரூபாயில் இருந்து 150 ரூபாயாக குறைகிறது. ஆட்கள் தேவை 60ல் இருந்து 35ஆகவும், களை எடுக்கும் ஆட்கள் தேவை 50 சதவீதமாகவும் குறைகிறது.
தானிய மகசூல் ஒன்றரை மடங்கு அதிகரிக்கிறது. வைக்கோல் மகசூல் இரண்டரை மடங்கு அதிகரிக்கிறது. இளவயது நாற்றுகளை நடுதல், ஒற்றை நாற்றுகளாக அதிக இடைவெளியிட்டு நடுதல், களைக்கருவி மூலம் களை நிர்வாகம், காய்ச்சலும், பாய்ச்சலும் முறையில் நீர் நிர்வாகம். குறைந்த நீரில் அதிக உற்பத்தியை கொடுக்கக் கூடிய ராஜராஜன் 1,000 சாகுபடி தொழில் நுட்பம் குறித்து விரிவான விளக்கம் பெற, அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் கடும் நடவடிக்கை : தர்மபுரி கலெக்டர் கடும் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,02:25 IST

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில் ரசாயன உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் விற்பனை நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, கலெக்டர் ஆனந்தகுமார் எச்சரித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் தற்போது ஓரளவு பருவமழை பெய்துள்ளதால் தற்போது விவசாயிகள் சாகுபடி பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனால், உர விற்பனை நிலையங்களில் உர விற்பனை சுறுசுறுப்படைந்துள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 283 தனியார் உர விற்பனை நிலையங்களும், 132 கூட்டுறவு சங்க விற்பனை நிலைங்களும் உள்ளன. இவற்றில் தர்மபுரி யூனியனில் 61 உர விற்பனை நிலைங்களும், பாலக்கோடு யூனியனில் 51 உர விற்பனை நிலைங்களும், நல்லம்பள்ளி யூனியனில் 43 உர விற்பனை நிலையங்களும் செயல்படுகிறது. காரிமங்கலம் யூனியனில் 52 விற்பனை நிலையங்களும், பென்னாகரம் யூனியனில் 46 விற்பனை நிலையங்களும், மொரப்பூர் யூனியனில் 54 விற்பனை நிலையங்களும், அரூர் யூனியனில் 54 விற்பனை நிலையங்களும் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டடி யூனியனில் 54 விற்பனை நிலையங்களும் செயல்படுகின்றன. இங்கு விவசாயிகளுக்கு தேவையான அனைத்து வகை ரசாயன உரங்களும் விற்பனைக்காக தயார் நிலையில் உள்ளது. உர விற்பனை நிலை அரசால் நிர்ணயிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது மாவட்டத்திற்கு தேவையான அனைத்து உரங்களும், விற்பனை நிலையங்களில் போதுமான அளவு இருப்பு வைத்து விற்பனை செய்யப்படுகிறது. அரசு நிர்ணயம் செய்த விலையை மீறி விற்பனை நிலையங்களில் விவசாயிகளிடம் ரசாயன உரங்களை கூடுதல் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அரசு நிர்ணயித்துள்ளப்படி 50 கிலோ யூரியா விலை 276 ரூபாய் 12 பைசாவும், பொட்டாஷின் விலை 262 ரூபாய் 66 பைசாவும், டி.ஏ.பி., இப்கோ விலை 516 ரூபாய் 85 பைசாவும், டிரிபின் சூப்பர் பாஸ்பேட் விலை 418 ரூபாய் 60 பைசாவும், சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் 166 ரூபாய் 40 பைசாவும் விற்பனை செய்ய வேண்டும். இந்த விலை விவரத்தை விற்பனை நிலையங்களில் விவசாயிகளுக்கு தெரியும்படி தெளிவாக எழுதி வைக்கப்பட வேண்டும். உர விற்பனை மற்றும் விநியோகம் குறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் புகார் மனு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு விவசாயிகள் கூடுதலாக உரங்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் மீது புகார் தெரிவிக்கலாம். விவசாயிகள் புகார் இருக்கும் பட்சத்தில் வேளாண்மை இயக்குனரிடம் 04342-23225, தர்மெபுரி வேளாண்மை உதவி இயக்குநரிடம் 9751506521, தர்மபுரி தரக்கட்டுப்பாட்டு வேளாண்மை அலுவலரிடம் 9443510268 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். புகார் மீது அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள். விவசாயிகள் விழிப்புணர்வோடு செயல்பட்டு அரசு நிர்ணயம் செய்த விலைப்படி ரசாயன உரங்களை வாங்கி பயன்பெற வேண்டும். விற்பனை நிலையங்களில் உரங்கள் வாங்கும்போது, விவசாயிகள் முறையான ரசீது பெற வேண்டும். மேலும், தரம் குறைவான உரங்கள், உரத்தட்டுப்பாடு மற்றும்

உரப்பதுக்கல் போன்ற பிரச்சனைகள் இருந்தாலும், வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**குறைந்த வாடகைக்கு உழவு கருவிகள்: மண்டல இணை பதிவாளர் தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2010,03:39 IST

தர்மபுரி: ""தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் குறைந்த வாடகைக்கு விடப்படும் டிராக்டர் மற்றும் உழவு கருவிகளை பெற்று விவசாயிகள் பயன் பெற வேண்டும்," என, தர்மபுரி மண்டல இணைப்பதிவாளர் மணிமாறன் தெரிவித்தார்.தர்மபுரி அடுத்த வாசிகவுண்டனூரில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. சங்க தனி அலுவலர் துரைராஜ் வரவேற்றார். தர்மபுரி துணைப்பதிவாளர்கள் ஜெயகோபாலன், சித்ரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தர்மபுரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் மணிமாறன் பேசியதாவது:தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு விவசாய சேவை மையம் துவங்கப்பட்டுள்ளது.

நெல் நடவை எந்திரம், களை எடுக்கும் எந்திரம், பவர் டிரில்லர், கதிர் அடிக்கும் எந்திரம், வாழை, தென்னை கன்று நடவு குழி தோண்டும் கருவி, மருந்து தெளிப்பான், கரும்பு சோகை எடுக்கும் எந்திரம் உள்ளிட்ட விவசாய கருவிகளை வாங்கி வைத்து, குறைந்த வாடகைக்கு விட விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.அவர்கள் கோரிக்கையை ஏற்று, விரைவில் சங்கத்தில் இல்லாத அனைத்து விவசாய கருவிகளும் வாங்கி, குறைந்த வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது சங்கத்தில் உள்ள டிராக்டர் மற்றும் உழவு கருவிகள் குறைந்த வாடகைக்கு விடுவதற்கு வாங்கி வைக்கப்பட்டுள்ளது. அவற்றை விவசாயிகள் வாங்கி பயன்படுத்தி விவசாய சாகுபடி பணிகளை மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.கூட்டுறவு சார் பதிவாளர்கள் கர்ணன், பெருமாள், துரை, சீனிவாசன், பாப்பிரெட்டிப்பட்டி கள மேலாளர் ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள், மகளிர் சுய உதவி குழுவினர் கலந்து கொண்டனர்.சங்க செயலாளர் ஸ்டாலின் மணிக்குமார் நன்றி கூறினார்.

**மழையால் 20 ஆயிரம் மூட்டை வெல்லம் வரத்து சரிவு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,03:45 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பெய்யும் மழையால் வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. வெல்லம் மார்க்கெட்டுக்கு 20 ஆயிரம் மூட்டைகள் வரை வரத்து குறைந்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. பெரும்பாலான விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுடன் ஒப்பந்தம் செய்து விடுகின்றனர். சர்க்கரை ஆலைகளுடன் பதிவு செய்யாத விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் கரும்பில் இருந்து வெல்லம், அச்சு வெல்லம், நாட்டு சர்க்கரை தயாரித்து, ஈரோடு மாவட்டத்தில் சித்தோடு, கவுந்தப்பாடி மற்றும் அலங்கியம் வெல்லம் மார்க்கெட்களில் விற்பனை செய்கின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் சில நாட்களாக மழை பெய்கிறது. மழை காரணமாக வெல்லம் உற்பத்தி கடுமையாக பாதித்துள்ளது. அக்டோபர் 16ம் தேதி ஆயுத பூஜை கொண்டாடப்படுகிறது. ஆயுத பூஜையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் அனுப்பும் பணி தீவிரமாக நடக்கிறது. வெல்லம் தேவை அதிகரிப்பு காரணமாக கிலோவுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது.

சித்தோடு மார்க்கெட்டில் பிரதி வாரம் சனிக்கிழமை சந்தை நடக்கிறது. நேற்றைய சந்தையில் வெல்லம் விலை அதிகரிப்பால், வெல்ல உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வெல்லம் வியாபாரி ஒருவர் கூறியதாவது: சித்தோடு மார்க்கெட்டுக்கு சித்தோடு, அம்மாபேட்டை, அத்தாணி, சத்தியமங்கலம், பவானி மற்றும் கர்நாடகா மாநிலம் மைசூரு, சாம்ராஜ் பகுதியை சேர்ந்த வெல்லம் உற்பத்தியாளர்கள் வெல்லம் கொண்டு வருகின்றனர். தமிழகம் மற்றும் வடமாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் வெல்லம் வாங்கிச் செல்கின்றனர்.

ஆயுத பூஜையை முன்னிட்டு அச்சு வெல்லம், உண்டை வெல்லம் தேவை அதிகரித்துள்ளதால், தமிழகம் மற்றும் வடமாநில வியாபாரிகள் சந்தையில் குவிந்தனர். மாவட்டத்தில் மழை பெய்வதால், வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. வெல்லம் உற்பத்தி பாதிப்பு, விற்பனை அதிகரிப்பு காரணமாக அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் ஆகியவற்றின் விலை ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை உயர்ந்துள்ளது. நாட்டு சர்க்கரை விலையில் மாற்றமில்லை.

உருண்டை வெல்லம் 30 கிலோ சிப்பம் 720 முதல் 800 ரூபாய்க்கு  விற்கப்பட்டது; இப்போது 750 முதல் 870 ரூபாயாக உயர்ந்துள்ளது. 750 முதல் 900 ரூபாய்க்கு விற்கப்பட்ட  30 கிலோ அச்சு வெல்லம் 750 முதல் 970 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நாட்டு சர்க்கரை 1,200 முதல் 1,570 ரூபாயாக நீடிக்கிறது.

வெல்லம் மார்க்கெட்டுக்கு உண்டை வெல்லம், நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம் ஆகியவை சராசரியாக 70 ஆயிரம் மூட்டைகள் வரை வரத்தானது. ஈரோடு மாவட்டத்தில் பெய்யும் மழை காரணமாக 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மூட்டைகள் மட்டுமே தற்போது வரத்தாகிறது. ஆயுத பூஜைக்கு பிறகு, தீபாவளி பண்டிகைக்கும் வெல்லம் தேவை என்பதால் வெல்லம் விலை இனி குறையாது. இவ்வாறு அவர் கூறினார்.

**மஞ்சள் பயிரை காக்க அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,02:14 IST

தா.பேட்டை: தா.பேட்டை வேளாண் தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொ) முருகன் வெளியட்ட அறிக்கை:தா.பேட்டை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் பயிரில் தற்போது இலைப்புள்ளி நோய் பரவலாக காணப்படுகிறது. பயிரின் இலைகளில் புள்ளிவடிவில் பழுப்பு நிறத்தில் புள்ளிகள் காணப்படும் இப்புள்ளிகள் விரிவடைந்து இலைகள் காய்ந்த சருகு போல் மாறிவிடும்.இதைக் கட்டுப்படுத்த தவறினால் பயிர் வளர்ச்சி குன்றி கிழங்கு உருவாவது தடைப்பட்டு மகசூல் பெரிதும் பாதிக்கப்படும். எனவே, ஒரு ஹெக்டருக்கு கார்பண்டாசிம் 500 கிராம் என்ற அளவில் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். விபரங்களுக்கு விவசாயிகள் தோட்டக்கலை அலுவலர்களை நேரில் சந்தித்து விளக்கம் பெறலாம்.

தா.பேட்டை வேளாண் வட்ட பகுதிக்கு உட்பட்ட சொந்தமாக இரண்டரை ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் 65 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படுகிறது. இத்திட்டத்துக்காக தேசிய வேளாண்வளர்ச்சி திட்டத்தின் கீழ் 11 ஆயிரத்து 200 மற்றும் 15 ஆயிரம் மதிப்பில் நீரில் கரையும் உரங்களும் வழங்கப்படுகிறது. நடப்பு 2010-11ம் ஆண்டுக்கு தா.பேட்டை பகுதியில் 40 ஹெக்டர் அளவுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. தகுதியுள்ள விவசாயிகள் வேளாண் அலுவலர்களை நேரில் சந்தித்து பயன்பெறலாம்.

**மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சிதாக்குதல் கட்டுப்படுத்த விவசாயிக்கு அட்வைஸ்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2010,04:05 IST

மண்ணச்சநல்லூர்: மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பயிரை காப்பாற்றும் தடுப்பு நடவடிக்கை குறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் சம்பத் தெரிவித்துள்ளதாவது:மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் மரவள்ளி பயிரில் தற்போது மாவுப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. மாவுப்பூச்சிகள் தாக்கி செடியின் நுனி, தண்டுப்பகுதி, இலைக்காம்பு ஆகியவற்றில் இப்பூச்சி வெண்மையாக படர்ந்திருக்கும். தாக்கப்பட்ட செடியில் எறும்பு நடமாட்டம் அதிகமாக இருக்கும்.மாவுப்பூச்சிகள் குறைவாக காணப்பட்டால் இரண்டு சதம் வேப்ப எண்ணெய் அல்லது ஐந்து சதம் வேப்பங்கொட்டை சாறு அல்லது மீண் எண்ணெய் சோப்பு கரைசல் (ஒரு லிட்டர் நீரில் 25 கிராம்) ஏதேனும் ஒன்றை தாக்கப்பட்ட செடிகளின் மீதும், சுற்றியுள்ள பகுதிகளிலும் தெளித்து கட்டுப்படுத்தலாம்.மாவுப்பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக காணப்பட்டால் புரபொனோபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி அல்லது

குளோர்பைரிபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஐந்து மில்லி, அல்லது டை மெத்தோயேட் ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி அல்லது இமிடாகுளோபிரிட் ஒரு லிட்டர். தண்ணீருக்கு 0.6 மில்லி, கரைசலில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம். மேற்கண்ட வழிமுறைகளை கடைப்பிடித்து கூடுதல் மகசூல் பெற்று பயன்பெறலாம்.

**வேளாண் விரிவாக்க மையத்தில் இணை இயக்குநர் திடீர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,02:01 IST

கரூர்: அரவக்குறிச்சி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜெகதீசன் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.மையத்தில் வேளாண் இடுபொருள் இருப்பு, வினியோகம், 2010-11ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் சிறு தளை வினியோகத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கிய மக்காச்சோளம், உளுந்து, நிலக்கோட்டை, எள் மற்றும் சூரியகாந்தி ரகங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அரவக்குறிச்சி அடுத்த நம்பகவுண்டனூரில் விவசாயி ராசப்பன் தோட்டத்தில், அமைத்துள்ள பயோ 9637 ரக சிறுதளை திடல்களை பார்வையிட்டார். சிறுதளை அமைக்கப்படுவதன் முக்கியத்துவம் மற்றும் அதனால் ஏற்படும் நன்மை குறித்து விளக்கமளித்தார். ஆய்வின் போது, வேளாண் துணை இயக்குநர் விஸ்வநாதன், அரவக்குறிச்சி வட்டார வேளாண் உதவி இயக்குநர் கந்தசாமி, துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன், உதவி அலுவலர் சதீஸ், முத்துச்செல்வன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**செம்மை நெல் சாகுபடிக்கு இடுபொருள் இலவசம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,01:51 IST

கரூர்: செம்மை நெல் சாகுபடி முறைக்கு வேளாண் இடுபொருள் இலவசமாக வழங்கப்படுவதாக, கரூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயந்தி அறிவித்துள்ளார்.
அறிக்கையில் உள்ளதாவது: வேளாண்மைத்துறையில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் தானிய உற்பத்தியை பெருக்கும்வகையில் பல திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. நெல் சம்பா நடவுப்பணி துவங்கி உள்ள நிலையில், செம்மை நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிடும் விவசாயிக்கு இலவசமாக வேளாண் இடுபொருள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கரூர்வட்டாரத்தில் நடப்பு ஆண்டுக்கான தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் செம்மை நெல் சாகுபடி முறையில், சம்பா நெல் ஒரு ஹெக்டேருக்கு பயிரிடும் 30 விவசாயிகளுக்கு விதை மற்றும்

உயிர் உரம், நுண்ணுரம், அடியுரம், மேலுரம், களை எடுக்கும் கருவி, மார்க்கர் கருவி இலவமாக வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள், கரூர வட்டார வே ளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம்.

**டெல்டா விவசாயிகளுக்கு ரூ.135 கோடி பயிர்கடன் வழங்கல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2010,03:32 IST

கும்பகோணம்: ""ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் உள்ள 48 ஆயிரம் விவசாயிகளுக்கு நடப்பாண்டு 135 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது," என கூட்டுறவுத்துறை அமைச்சர் கோ.சி.மணி தெரிவித்தார்.கும்பகோணத்தில் அவர் கூறியதாவது:கும்பகோணம், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கப்படுகிறது.அதன்படி தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நடப்பாண்டு 250 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதில், விகிதாச்சார குறியீடாக 156.50 கோடி ரூபாய் உள்ளது.இதையடுத்து சென்ற ஏழாம் தேதி வரை 135 கோடியே 38 லட்சம் ரூபாயை 47 ஆயிரத்து 931 விவசாயிகளுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 599 ஏக்கரில் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.விவசாய நகை கடனாக 13 ஆயிரத்து 743 விவசாயிகளுக்கு 50 கோடியே 20 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கூட்டு பொறுப்பு குழுக்களை சேர்ந்த 869 குழுக்களின் ஏழாயிரத்து 447 விவசாயிகளுக்கு 8.95 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. புதிய உறுப்பினர்களாக சேர்ந்துள்ள 13 ஆயிரத்து 884 விவசாயிகளுக்கு 38 கோடியே 71 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 114 கோடியே 46 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருந்தது. எனவே, கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 21 கோடி ரூபாய் கூடுதலாக இந்த ஆண்டு பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு அமைச்சர் கோ.சி.மணி தெரிவித்தார்.

**தென்னை நார்க்கழிவு தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு ஆய்வுக்கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2010,03:30 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பட்டுக்கோட்டை வட்டம் தாமரங்கோட்டை அருகே பழவேறிக்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும்

தென்னைநார்க்கழிவு தொழிற்சாலை அமைக்கும் பணி தொடர்பான ஆய்வுக்கூட்டம் கலெக்டர் சண்முகம் தலைமையில் நடந்தது.அவர் பேசியதாவது: பட்டுக்கோட்டை தென்னை விவசாயத்துக்கு புகழ் பெற்றதாகும். தென்னை விவசாயிகளின் நலனுக்காகவும், தென்னை நார்த்தொழிற்சாலைகள் மற்றும் அப்பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் பழவேறிக்காடு கிராமத்தில் தென்னை நார்க்கழிவு பதப்படுத்தும் தொழிற்சாலை 5.8 ஏக்கர் நிலத்தில் ரூபாய் 56 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது.இந்த தொழிற்சாலையில் பதப்படுத்தும் தென்னை நார்க்கழிவு கட்டிகளுக்கு கொரியா, சீனா, ஐரோப்பிய நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது.

பழவேறிக்காடு கிராமத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு இத்தொழிற்சாலை மூலம் கிடைக்க உள்ளது. தொழிற்சாலையின் கட்டுமான பணிகள் திட்டமிட்டப்படி நடந்து வருவதால் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி டிசம்பர் மாதத்தில் இருந்து தொழிற்சாலை செயல்படும் வகையில் பணிகள் நடந்து வருகிறது.பட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த தென்னை நார்த்தொழிற்சாலை உரிமையாளர்களை ஒரு குழுவாக இணைத்து இத்தொழிற்சாலை அவர்களுக்கான பொதுவசதி மையமாக அமைக்கப்பட்டு வருகிறது. தென்னை நார்த்தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்களுடைய தென்னை நார்க்கழிவுகளை இத்தொழிற்சாலையில் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு கிடைக்கும். இதன் வாயிலாக பட்டுக்கோட்டை சுற்றி உள்ள கிராம மக்களின் பொருளாதாரம் மட்டுமல்லாது, தஞ்சை மாவட்டத்துக்கு அன்னிய செலாவணியை ஈட்டித்தரும் வகையில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.இவ்வாறு கலெக்டர் சண்முகம் பேசினார்.நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் ரவிக்குமார், மாவட்டமுன்னோடி வங்கி மேலாளர் வெற்றிச்செல்வன், மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் (பொறுப்பு) ரவீந்திரன், தஞ்சை மண்டல தென்னைநார் வாரிய பயிற்சி மைய இளநிலை ஆய்வாளர் சுனில், உறுப்பினர் ஸ்யாம்சுந்தர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**அம்மாபேட்டை யூனியனில்ஒன்பது விவசாயிகளுக்குபவர்டில்லர் கருவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2010,03:35 IST

கும்பகோணம்: கும்பகோணம் கோட்டம் அம்மாபேட்டை யூனியனில் விவசாயிகளுக்கு பவர்டில்லர் கருவிகளை யூனியன் துணைத்தலைவர் தியாகசுரேஷ் வழங்கினார்.தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பதிவு செய்து பவர்டில்லர் கருவிகளை வாங்கும் விவசாயிகளுக்கு ரூபாய் 45ஆயிரம் மானியத்துடன் வேளாண்மை பொறியியல் துறை மூலம்

வழங்க தமிழக அரசு அறிவித்தது. இதைத் தொடர்ந்து கும்பகோணம் கோட்டத்தில் அம்மாபேட்டை யூனியனைச் சேர்ந்த ஒன்பது விவசாயிகளுக்கு பவர் டில்லர் கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.ஒன்பது விவசாயிகளுக்கும் மொத்த அரசு மானியத்தொகை ரூபாய் நான்கு லட்சத்து ஐந்தாயிரம். ரூபாய் ஒரு லட்சத்து 30 ஆயிரம் மதிப்புடைய ஒன்பது பவர் டில்லர் கருவிளின் மொத்த மதிப்பு ரூபாய் 11.70 லட்சம். முதற்கட்டமாக மூன்று விவசாயிகளுக்கு அம்மாபேட்டை யூனியன் துணைத்தலைவர் தியாக சுரேஷ் பவர்டில்லர் கருவிகளை வழங்கினார்.

**தேங்காய் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,02:56 IST

திருத்துறைப்பூண்டி: தேங்காய் விலை உயர்வால் வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே நேரம் தேங்காய் சில்லறை விற்பனை விலை அதிகரித்ததால் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர். திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி தாலுகா முத்துப்பேட்டை பகுதியில் ஜாம்புவானோடை, தில்லைவளாகம், அரமங்காடு, தம்பிக்கோட்டை கீழக்காடு, இடும்பவனம், கற்பகநாதர்குளம், ஆலங்காடு, உப்பூர், உதயமார்த்தாண்புரம், பேட்டை உட்பட பல கிராமங்களில் தென் னை சாகுபடி அதிகமாக உள்ள து. முத்துப்பேட்டை பகுதியில் நெல் சாகுபடிக்கு அடுத்து தென் னை சாகுபடியில்தான் விவசாயிகள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். தென்னையை நம்பி உள்ள விவசாயிகள் கடந்த காலங்களில் விலை குறைவாகவே இருந்து வந்தது. தென்னை பராமரிப்பு கணக்குப்பார்த்தால் லாபமில்லை என உற்பத்தியாளர்கள் கவலை அடைந்தனர். நோய் தாக்குதலில் தென்னை பாதிக்கப்பட்டுள்ளது. இதை மருந்து வைத்து பிரச்னையை சமாளிக்க விவசாயிகள் பெரிதும் சிரமப்பட்டனர். அதனால், செலவுக்கு ஏற்ப போதிய விலை கிடைக்காததால் மிகுந்த வேதனையில் இருந்தனர். இயற்கை சீற்றத்தின்போது தென்னை மரம் காற்றின் வேகத்தில் விழுந்து வந்தன. தொடர் பாதிப்புக்களாக சோர்ந்து காணப்பட்ட விவசாயிகளுக்கு, தேங்காயின் விலை தற்போது மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. கடந்த நான்காண்டுகளுக்குப்பின் விலை உயர்வு அதிகரித்து வியாபாரிகளுக்கும், தென்னை உற்பத்தியாளர்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தமிழகத்தில் கன்னியாகுமரி, கோவை, பொள்ளாச்சி, தஞ்சாவூர், பேராவூரணி உட்பட பல இடங்களில் தேங்காய் உற்பத்தி அதிகம். மேலும், கேரளாவில் இருந்து தமிழகத்துக்கு தேங்காய் இறக்குமதி செய்யப்படும். தற்போது அனைத்து பகுதியிலும் தேங்காய் உற்பத்தி குறைந்ததால் தற்போது விலை உயர்வு ஏற்பட்டுள்ளது என்கின்றனர். தற்போதுள்ள நிலையில் 1,080 தேங்காய் 5,500 ரூபாய் முதல் 8,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.  தீபாவளி மற்றும் நவராத்திரி பண்டிகையாக காலமாக உள்ளதால் தே ங்காய் சில்லரை விலையும் உய ர்ந்துவிட்டது. ஒரு தேங்காய் 8.50 ரூபாய் முதல் விலை உள்ளதால் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர். மூன்று அல்லது நான்கு தேங்காய் 10 ரூபா

ய், 12 ரூபாய் என்ற விற்ற நிலை மாறி அதே தேங்காயில் ஒரு காய் ஏழு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வியாபாரிகளும் இருப்புக்கூட இல்லாத அளவுக்கு தட்டுப்பாடு உள்ள நிலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

**கோகோ விவசாயிகளுக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,03:37 IST

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் கோகோ சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியம் வழங்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறும்போது,""தென்னை மற்றும் பாக்குத் தோப்புகளில் கோகோவை ஊடுபயிராக பயிரிடலாம். இதன் விதைகள் சாக்லெட், ஊட்டச் சத்து பானம், ஐஸ்கிரீம், பிஸ்கட், கேக் வகைகள், மருந்துப் பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது.

தென்னையில் ஊடுபயிராக பயிரிடுவதால் இயற்கை உரம் கிடைப்பதுடன், களைகள் கட்டுப்படுத்தப்பட்டு, மண் அரிமானம் தடுக்கப்பட்டு, தென்னையில் மகசூல் அதிகரிக்கிறது. கோகோ நாற்றுக்கள் காட்பரி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. இதனால் ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கும். வங்கிகள் மூலம் நடவு செலவிற்குத் தேவையான கடன் வசதியும் தோட்டக்கலை அலுவலர்களால் செய்து தரப்படுகிறது. கோகோ பயிரிட விரும்பும் விவசாயிகள், தங்கள் பகுதி வேளாண்மை வளர்ச்சி மைய அலுவலர்களையோ, கொட்டாம்பட்டி தோட்டக்கலை உதவி இயக்குனரையோ அணுகலாம்,"" என்றார்.

**விதை விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2010,02:55 IST

மதுரை:விதைச் சட்டப்படி நடந்து கொள்ளாத விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.மதுரையில் பெரியாறு - வைகை பாசன பகுதிகளின் விவசாய சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதையடுத்து அனைத்து பகுதிகளிலும் சாகுபடி பணிகள் மும்முரம் அடைந்துள்ளன. இந்நிலையில் விதை விற்பனையாளர்கள் ஆய்வுக் கூட்டம் மற்றும் பயிற்சி மாவட்ட விதை ஆய்வு துணைஇயக்குனர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடந்தது. விதை விற்பனையாளர்கள் உரிமம் இன்றி விதைகளை விற்பனை செய்யக் கூடாது.

தரமான சான்று பெற்ற முளைப்புத் திறன் உள்ள விதைகளை விற்க வேண்டும். விற்பனையாளர்கள் விற்கும்போது விவசாயிகளுக்கு ரசீது கண்டிப்பாக வழங்க வேண்டும்.

விற்பனை ரசீதில் விவசாயிகளின் கையெழுத்தையும் கட்டாயமாக பெற வேண்டும். முளைப்புத் திறன் குறைந்த அல்லது விதைக்க லாயக்கற்ற விதைகளை உற்பத்தியாளர்களுக்கே திரும்ப அனுப்பிவிட வேண்டும். இவ்விதிமுறைகளை கடைபிடிக்காத விற்பனையாளர்கள் மீது விதைச் சட்டப்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதில் விற்பனையாளர்களுக்கு சிறையோ, அபராதமோ, இரண்டுமோ அளிக்கப்படலாம்.இந்நிகழ்ச்சியில் விதை ஆய்வாளர்கள் சுப்புராஜ், மோகன்ராஜ், வளர்மதி பங்கேற்றனர். விற்பனையாளர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள், அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கங்களை தெரிவித்தனர்.

**தொடர் மழையால் உருளைக்கிழங்கு விற்பனை பாதிப்பு:விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 10,2010,21:37 IST

கொடைக்கானல்:கொடைக்கானலில் பெய்யும் தொடர்மழையால், மண்சரிவு, மரங்கள் விழுந்துள்ளதால்விளைந்த கிழங்குகளை வெளிமார்க்கெட்டிற்கு குறிப்பிட்ட நேரத்தில் அனுப்ப முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கொடைக்கானல் மேல்மலை கிராமங்களான பூண்டி, பூம்பாறை, மன்னவனூர், வடகவுஞ்சி கிராமங்களில் அதிகளவில் உருளைகிழங்கு விளைந்துள்ளது. இங்கு விளையக்கூடிய கிழங்குகள், பெங்களூர், கேரளா,வடமாநிலங்களுக்கு லாரிகள் மூலம் அனுப்பிவைக்கப்படுகின்றன. சில நாட்களாக பெய்துவரும் கனமழையால், கிராமங்களுக்கு செல்லும் ரோடு குண்டும், குழியுமாக, மரங்கள் விழுந்து முற்றிலும் கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் உள்ளது.இதனால் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை குதிரைகள் மூலம் ஏற்றி வந்து, கொடைக்கானல்-வத்தலக்குண்டு, பழநி ரோட்டிற்கு கொண்டு வந்து, அங்கிருந்து லாரிகளில் ஏற்றி அனுப்பி வைக்கின்றனர். வடகவுஞ்சி விவசாயி துரைப்பாண்டி கூறுகையில்," எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு தொடர்மழையால், லாரி வரமுடியாத அளவிற்கு ரோடுகள் உள்ளதால், விளைந்த கிழங்குகளை குதிரைகள் மூலம் பிரதான ரோட்டிற்கு கொண்டு வந்து அனுப்பி வைக்க வேண்டிய நிலை உள்ளது.குதிரைக்காக கூடுதல் செலவு என்றாலும், குறிப்பிட்ட நேரத்தில் மார்க்கெட்டிற்கு அனுப்பி வைத்தால் மட்டுமே, செலவளித்த தொகையை
எடுக்க முடியும் 'என்றார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கி÷ஷார் கூறுகையில்," மழையால் சேதமடைந்துள்ள கிழங்குகள், போக்குவரத்து தடையால் குறிப்பிட்ட நேரத்திற்குள் மார்க்கெட்டிற்கு அனுப்ப முடியாமல்நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நிவாரணம்வழங்க அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம்' என்றார்.

## விவசாய மானியங்கள் குறைக்கப்படுகின்றன: சங்க துணை தலைவர் குற்றச்சாட்டு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,01:33 IST

நாகர்கோவில்: விவசாயத்திற்கான மானியங்களை மத்திய அரசு படிபடியாக குறைத்து வருவதால் விவசாயிகள் வேதனைக்குள்ளாகி வருகின்றனர் என தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் பெரும்படையார் கூறினார்.விடுதலை போராட்ட வீரர் சீனிவாசராவ் நினைவு தின பொதுக்கூட்டம் அருமனை அருகே முக்கூட்டுக்கல் பகுதியில் நடந்தது. இந்நிகழ்ச்சிக்காக நாகர்கோவில் வந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் பெரும்படையார் கூறியதாவது;-தமிழக விவசாயிகள் நிலை பின்தள்ளப்பட்டு வருகிறது. தற்போது அரசு இலவச மின்மோட்டார் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் என அறிவித்துள்ளது. தற்போது ஏற்கனவே இருந்த பழைய மின்மோட்டாரை எடுத்துவிட்டு, புதிய மின்மோட்டார் அமைத்து தரப்படும் என கூறியுள்ளது. இது முரண்பாடான செயல். தற்போதைய சூழ்நிலையில் விவசாய நிலங்கள் பிளாட்களாகவும், தொழிற்சாலைகளாகவும், கட்டடங்களாகவும் மாற்றப்படும் நிலை உள்ளது.மத்திய அரசு, விவசாயிகளுக்கு மானியத்தை படிப்படியாக குறைத்து வருகிறது. விவசாயத்திற்கு தற்போது மத்திய அரசு ஒதுக்கி வரும் நிதிஒதுக்கீடு குறைவாக உள்ளது. தென்மாவட்டங்களில் அம்பை விதைநெல் கிடைக்காத நிலை உள்ளது. வெளியில் 30 கிலோ நெல்விதை 800 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். அமெரிக்க உணவு உற்பத்தியை இங்கு புகுத்தும் வேலையை மத்திய அரசு முன்னிலைப்படுத்துகிறது. தற்போதைய சூழ்நிலையில் நெல்விதைகள் கிடைக்காமலும், உரங்கள் கிடைக்காமலும் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தியாவில் உணவு உற்பத்தி பின்தங்கி உள்ளது. உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு முறையான விலை கிடைப்பதில்லை. பஞ்சாபில் விளையும் கோதுமைக்கு ஏற்ற விலையை அரசு நிர்ணயம் செய்யவில்லை. ஆனால் வெளிநாடுகளில் இருந்து கோதுமையை 13 ரூபாய்க்கு வாங்கி, இங்கு 7 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறது. நெல் விவசாயத்திலும் அரசு முறையான அணுகுமுறையை கையாளவில்லை. அறுவடை காலங்களில் நெல்கொள்முதல் நிலையம் சீரான முறையில் செயல்படுத்திட வேண்டும். அரசு தஞ்சையில் மட்டும் கொள்முதல் நிலையத்தை சீர் செய்துள்ளது. இதனை முறையாக தமிழகம் முழுவதும் நடைமுறைப்படுத்திட வேண்டும். மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் சில இடங்களில் விவசாயிகள் பயிரடப்பட்டு வரும் பொருட்களை காட்டு விலங்குகள் சேதப்படுத்தி வருகிறது. இதற்கான இழப்பீடு தொகையை கேட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டால் இதற்கான இழப்பீடு தொகை வழங்கப்படுவதில்லை. ஆனால் விவசாய நிலங்களில் ஏதேனும் காட்டு விலங்குகள் இறந்து கிடந்தால் வழக்கு பதிவு செய்வதும், இதற்கான தண்டனை வழங்கவும் பணம் செலவு செய்யவேண்டிய நிலையையும் அரசு ஏற்படுத்திவருகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். விவசாய நிலம்

பறிபோகும் நிலையும், உணவு உற்பத்தி பாதிக்கப்படும் நிலையும் குறித்து அரசு கண்டுகொள்வதில்லை.விவசாயிகளுக்கான திட்டங்கள், விவசாயிகளுக்கு சாதகமாக இல்லை. பன்னாட்டு தொழிற்சாலைகளுக்கு சாதகமாக அரசு விளங்கி வருகிறது. தற்போது இலவச மின்சார மோட்டார்களுக்கு மீட்டர் பொருத்தவேண்டும் என அரசு கூறியுள்ளது. நாளடைவில் மறைமுகமாக இலவச மின்சாரம், மானியம் ரத்து செய்ய அரசு முடிவு செய்துள்ளதை இது காட்டுக்கிறது.இவ்வாறு தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத்துணை தலைவர் பெரும்படையார் கூறினார். அவருடன் குமரி மாவட்ட செயலாளர் பொன்னுலிங்கஜயன் உள்ளிட்டோர் இருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *திருவாரூரில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி வயலை முதல்–அமைச்சர் கருணாநிதி ஆய்வு செய்தார்*




திருவாரூர் மாவட்டம் கோவில்திருமாளம் கிராமத்தில் உள்ள ஒரு வயலில் "ராஜராஜன் 1000" நெல் சாகுபடி செய்யப்பட்டு இருப்பதை காரில் இருந்தபடியே முதல்–அமைச்சர் கருணாநிதி பார்வையிட்ட போது எடுத்த படம். அருகில் கலெக்டர் எம்.சந்திரசேகரன், மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், வேளாண்மை இணை இயக்குனர் சொ.அன்பழகன் மற்றும் பலர் உள்ளனர்.

*திருவாரூர், அக்.11–*

*திருவாரூரில் ராஜராஜன் 1000 நெல் சாகு படி வயலை முதல்– அமைச்சர் கருணாநிதி நேற்று நேரில் ஆய்வு செய்தார்.*

*கருணாநிதி வருகை*

*திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முதல்–அமைச்சர் கருணாநிதி சென்னையில் இருந்து காரில் புறப்பட்டு புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் வழியாக நேற்று திருவாரூர் மாவட்டத்திற்கு வந்தார். திருவாரூர் மாவட்ட எல்லையான குமாரமங்கலத்தில் அவருக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.*

அதனைத்தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு பேரளம், பூந்தோட்டம் வழியாக கோவில்திருமாளம் சென்றார். அங்கு தயாளுஅம்மாளின் அண்ணன் திருவாரூர் மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழுத்தலைவர் கோ.தெட்சிணாமூர்த்தியின் மனைவி தனம்அம்மாள் படத்திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

ராஜராஜன் 1000 நெல் சாகுபடி

முன்னதாக கோவில்திருமாளத்தில் உள்ள ஒரு வயலில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதனை பார்த்த முதல்–அமைச்சர் கருணாநிதி காரை நிறுத்தி சாகுபடி செய்யப்பட்ட வயலை பார்வையிட்டார். அப்போது மாவட்ட கலெக்டர் எம்.சந்திரசேகரன், வேளாண்மை இணை இயக்குனர் சொ.அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.

அப்போது ராஜராஜன் வயல் சாகுபடியின் பலன் பற்றி முதல்–அமைச்சர் கேட்டறிந்தார்.

செலவு குறைவு

அப்போது கலெக்டர் எம்.சந்திரசேகரன், “இந்த சாகுபடி முறையால் விதை, உரம், தண்ணீர், செலவு மிகவும் குறைவு. இதனால் 30 சதவீதம் சாகுபடி செலவு குறைகின்றது. 40 சதவீதம் அதிக மகசூலும் கிடைக் கும். சி.ஆர்.1009 ரக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது 155 நாள் சாகுபடியாகும்” என்று கூறினார்.

பின்னர், “இது யாருடைய நிலம்?” என்று முதல்–அமைச்சர் கேட்டார். அங்கிருந்த விவசாயி வரதராஜன், “தன்னுடைய நிலம்“ என்றார். “எத்தனை ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது“ என்று கேட்டதற்கு, 10 ஏக்கர் பரப்பில் முழுமையாக ராஜராஜன் 1000 நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இது எத்தனை நாள் பயிர் என்று முதல்–அமைச்சர் கேட்டதற்கு, “40 நாட்கள்“ என்று விவசாயி வரதராஜன் பதில் அளித்தார். மேலும், அரசு விதை, உரம், கடன்வசதி செய்து தந்துள்ளதால் விவசாயிகள் முழுமையாக சாகுபடி பணி செய்து வருகிறோம். அதற்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

இறுதியாக முதல்–அமைச்சர் கருணாநிதி, அங்கு காரை சுற்றி நின்று கொண்டிருந்தவர்களை சற்று நகரச்சொல்லி, வயலில் இருந்த “ராஜராஜன் 1000“ என்ற பலகையை பார்த்தார். அதில் “இ” சேர்த்து “இராஜராஜன் 1000” என்று திருத்தம் செய்ய வேண்டும் என்று தனக்கே உரிய பாணியில் நகைச்சுவை உணர்வுடன் கூறிவிட்டு புறப்பட்டார்.